# KODDAIMUNAI KANISHTA VIDIYALAYAM BATTICALOA

# GRADE FIVE SCHOLARSHIP

## Awarding Ceremony



# 2010



# KODDAIMUNAI KANISHTA VIDIYALAYAM

# BATTICALOA

## GRADE FIVE SCHOLARSHIP

## Awarding Ceremony

## 2010

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்க தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மளந்த தனைத்தும் அறிந்திடு
வண்மொழி வாழியவே!

– மகாகவி பாரதியார்.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்

திரு. **A.M.E.**போல்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எமது வலயத்தில் மட்/ கோட்டமுனை கனிஸ்ட வித்தியாலயம் தரம் - 5 புலைமைப்பரிசில் பரீட்சையில் தனக்கென ஒரு அடைவு மட்டத்தில் தனக்கென ஒரு தனியான இடத்தை பிடித்து வைத்துள்ளதென்பது பாரட்டுக்குறியதொன்றாகும். கடந்த காலங்களில் இப்பாடசாலையின் பெறுபேறுகள் திருப்தி தரும் வகையில் அமைந்திருந்ததென்பதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.அந்த வகையில் அப்பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை தேடித் தந்த மாணவர்களுக்கு பரிசளிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

ஏனைய பரீட்சைகளைப் போலல்லாது தரம்- 05 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றோரின் அர்பணிப்பும் ஈடுபாடும் அதிகரித்துள்ள அதே வேளை, அதிபர், ஆசிரியர்களின் இப்பரீட்சை வெகுவாக ஈர்த்துள்ளதெனலாம்.அதன்பிரகாரம் இப்பாடசாலையில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 37பேர் 142புள்ளிக்கு மேல் சித்திபெற்றும் 88 மாணவர்கள் 70க்கும் 141 புள்ளிக்கும் இடையில் தகுதி பெற்றிருப்பதும் பாராட்டுக்குறியதாகும்.மேலும் வலயத்தில் 1ம் இடத்தையும் இப்பாடசாலை பெற்றுள்ளது.

இப்பரீட்சையில்சித்தியடைந்தசகலமாணவர்களையும்வாழ்த்துகிறேன். மாணவர்களது விடாமுயற்சி,பெற்றோர்களது ஆதரவு,அனுசரனை,ஆசிரியர்களது தன்னலம் கருதாத அர்பணிப்புடனான கற்பித்தல் செயற்பாடுகள்,அதிபரின் வழிநடத்தல், திறன் என்பன ஒன்றிணைந்து இவ் வெற்றியைத் தந்துள்ளன.குறிப்பாக பிள்ளைகளுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும்,வழி நடாத்திய அதிபருக்கும் என் பாராட்டையும் தெரிவிக்கின்றேன்.

மேலும் இவ்விழா சிறக்க சகல விதத்திலும் ஒழுங்குகள் செய்த, உழைத்த ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளும்,வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

திரு.A.M.E.போல்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் தலைவர்
ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜீ மகாராஜ்
அவர்களின்

# ஆசிச் செய்தி

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் - சித்திபெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதற்கு எடுத்துள்ள முயற்சி அனைவராலும் பாராட்டப்படவேண்டிய தொன்றாகும். திறமை படைத்த மாணவர்கள் மேலும் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்வதற்கும், ஆற்றல் குறைந்த மாணவர்கள் மேலும் கூடிய முயற்சி எடுப்பதற்கும் இத்தகைய பாராட்டு நிகழ்வுகள் பெரிதும் உதவியாக விளங்கும்.

"மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்." என்று சுவாமி விவேகானந்தர் கல்விக்கு சிறந்த வியாக்கியானம் கொடுக்கின்றார்.

நமது கல்வி முறையானது நமது சமயம், மற்றும் கலாசாரத்தில் அடங்கியுள்ள நீதி, நல்லொழுக்கம் ஆன்மீகக்கருத்துக்களின் அடிப்படையில் உறுதியாக அமையுமாயின் நாம் இன்னும் மேலான பெறுபேறுகளைப் பெறமுடியும்.

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் 5ல் கல்வி கற்ற மாணவர்கள், 2010ம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் 37 பேர் சித்தியடைந்து மட்டக்களப்பு வலயத்தில் 1ம் இடத்தை வென்றெடுத்ததோடு 88 மாணவர்கள் 70ற்கும் 141ற்கும் இடையில் புள்ளிகளைப் பெற்றிருப்பது இப்பாடசாலையின் கல்வித்தரத்தைப் பறைசாற்றுகின்றது.

சிறந்த சாதனைகளைப் படைத்த மாணவர்களுக்கும், மாணவர்களை தயார்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள். இந்நிகழ்வுகள் அனைத்தும் வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசிவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இறைபணியில்
சுவாமி அஜராத்மானந்தஜீ மகாராஜ்

# ஆசிச் செய்தி

மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் 2010ம் வருட தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"மரம் நல்லது என்றால் அதன் கனியும் நல்லதாக இருக்கும். மரத்தை அதன் கனியால் அறியலாம்." (மத்12:33) என்ற இயேசு மகானின் பொய்யா வாக்கு இந்த வைபவத்தின் வழி மெய்யாக்கப்படுவதை அறிந்து வியக்கின்றேன். இப்பிள்ளைகள் இன்று நற்பேறுகளைப் பெற பலரும் காரணமாயிருந்திருக்கிறார்கள். நல்ல குழந்தைகளை பெற்றெடுத்ததோடு மட்டுமல்ல, அவர்களது கல்வி அபிவிருத்தியையே முழு நோக்காகக் கொண்டு செயல்படுகின்ற பெற்றோரையும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலே ஆர்வமெடுத்து, நல்லறிவூட்டி சிறந்த பெறுபேறுகளைப் பெறும் அளவுக்கு அவர்களை உருவாக்கிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும், பாராட்டாமல் இருக்க முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் தங்களுக்குத் தந்த கொடைகளையும் ஆற்றல்களையும் நன்கு பயன்படுத்தி கடினமாக உழைத்து, நற்பேறுகளைப் பெற்று, குடும்பத்துக்கும் பாடசாலைக்கும், இப்பிரதேசத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ள மாணவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டுவதோடு, அவர்களது எதிர்காலம் சகலவிதத்திலும் ஒளிமயமானதாக விளங்கிட ஆசி கூறுகிறேன்.

இன்று சித்தியடைந்த பிள்ளைகள் நிச்சயம் எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களில் நுழைவார்கள் என்று உறுதியுடன் எதிர்வு கூறமுடியும். நல்ல நிலத்தில் விழுந்த விதை ஒன்றுக்கு நூறாகப் பலன் கொடுக்கும். பெறுபேறு பெறாத பிள்ளைகளும் மனம் தளராமல், 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க தொடர்ந்தும் ஊக்கத்துடன் பாடங்களைக் கற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். 'கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை' என்ற நம்பிக்கையுடன் எல்லாம் வல்ல இறைவனைப் பற்றிப்பிடித்து அனைவரும் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி பெற ஆசித்து விடைபெறுகிறேன்.

பேரருட்திரு. பொன்னையா யோசப்,
திருகோணமலை - மட்டக்களப்பு,
மறைமாவட்ட துணை ஆயர்

காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவரும்,
மட்டக்களப்பு மாவட்ட பல்சமய சமாதானத்துக்கான
ஒன்றியத்தின் உபதலைவருமான
மௌலவி அல்ஹாஜ் ஏ.எம்.அப்துல் காதர் (பலாஹீ) J.P அவர்களின்

# ஆசிச் செய்தி

கல்வியின் மூலம் எட்டப்படும் இறுதி அடைவுகள் அனைத்தினதும் தொடக்கமாக இருப்பது பாடசாலைக்கல்வியே, பாடசாலை எனும் சமூக நிறுவனம் தனது இலக்குகளை எட்டாதவிடத்து ஒரு சமூகத்தின் பொருளாதார, அரசியல், கலாசார எதிர்பார்ப்புக்களை எட்டுவதும் சாத்தியமற்றது.

இதனடிப்படையில் பாடசாலைக்கல்வியின் பூரண இலக்கை அடையும் நோக்கில் இளம் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்காக இம்மாவட்டத்தில் சிறப்பாக கல்விப்பணியாற்றும் மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் சிறப்பான பணிகள், அதன் முன்னேற்றங்கள் அனைத்தும் என்றும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இச்சிறப்புமிக்க இவ்வித்தியாலயத்தின் 2010ம் வருட தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரிசளிப்பு பாராட்டு விழாவுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உண்மை, நேர்மை, வாய்மை, ஒழுக்கசீலம் என்பவைகளுடன் கூடிய கல்வியை இளம் சிறார்களுக்கு சிறப்பாக ஊட்டி சிறந்த நல்லறிஞர்கள், புத்தி ஜீவிகள், பல்துறை சார்ந்தவர்கள் சமூகத்திற்கு கிடைக்க இவ்வித்தியாலயம் காரணமாக இருந்துள்ளது. அந்தவகையில் மேற்படி வித்தியாலயத்திற்கு உயிரூட்டிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் இன்னும் பல்லாண்டு காலம் கல்விப்பணியாற்றி வளரும் இளம் சிறார்களின் அறிவுப்பசி தீர்க்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

நன்றி

மௌலவி.ஏ.எம்.அப்துல்காதர் (பலாஹீ) J.P

# வாழ்த்துச் செய்தி....

மனிதனின் மேம்பாட்டுக்கும்; மனித தத்துவத்தின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத சாதனங்களுள் கல்வி முதலிடத்தைப் பெறுகின்றது. இதனடிப்படையில் 'காலத்தே பயிர் செய்' என்பது நம்மத்தியில் வழங்கப்படும் ஒரு கூற்று, காலம் பிந்தியோ, முந்தியோ பயிர் செய்தல் பயனில்லை. பயிர்களும் உரிய விளைச்சலைத்தராது. அதே போல் கல்வியும் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டியதொன்றாகும். எனவே ஆரம்பக்கல்வியும், அது வழங்கப்படும் காலமும் பிள்ளைகளின் வாழ்க்கையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இந்தவகையில் மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஈட்டிய சாதனைகள் அவர்களின் இயல்பான உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகும் இம்மாணவர்களுள் பொதிந்திருந்த உள்ளார்ந்த திறன்களை உரியவாறு வெளிக்கொணர்வதில் பங்குதாரர்களாக இருந்த பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், மற்றும் கல்விப்பணிப்பாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாகும்.

அதேவேளை தன் திறனில் அடைவுக்குரியவர்களான இம்மாணவர்களைப் பாராட்டி, ஊக்குவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழா வரவேற்கத்தக்க முயற்சிகளாகும்.

இம்மாணவர்கள் எதிர்காலத்தில் கல்விச்செயற்பாடுகளில் மேலோங்கி, பல்துறைகளிலும் விற்பனர்களாகத்திகழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

A.S.யோகராஜா,
அதிபர்,
மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

# வாழ்த்துச் செய்தி....

மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் இருந்து 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிப் பரிசு வழங்கும் நிகழ்வுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் ஆற்றும் சேவை மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்கள். இவ்வித்தியாலம் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து குன்றின்மேல் விளக்குப்போல் என்றும் பிரகாசிக்க ஆண்டவனை வேண்டுகின்றேன்.

திரு.N.M.கந்தசாமி

இளைப்பாறிய அதிபர்,

மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்,

மட்டக்களப்பு.

## அதிபர் அறிக்கை

இன்றைய நிகழ்வின் பிரதமஅதிதி அவர்களே, கௌரவ அதிதிகளே, சிறப்பு அதிதி அவர்களே, சமயப்பெரியோர்களே, பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர், நிர்வாக உறுப்பினர்களே, பரிசளிப்பு விழாக்குழுவினர்களே, நலன் விரும்பிகளே, ஆசிரியர்களே, ஊழியர்களே, அன்பான மாணவர்களே அனைவரையும் வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

## வித்தியாலயத்தின் நோக்கு

"கற்றுணர்ந்தொழுகு" என்பது எமது வித்தியாலயத்தின் மகுட வாசகம். தற்பொழுது வித்தியாலயம் காணவிளைவது, "அறிவு, திறன், மனப்பாங்கு, ஒழுக்க விழுமியங்கள், கூடிவாழும் பண்புமிக்க இளம் சமுதாயம். இதற்கமைவாக வித்தியாலயத்தின் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

## வித்தியாலய அறிக்கை

மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரில் மங்களச் சுடர்விடும் மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் கிழக்கிலங்கையில் ஆரம்பக்கல்விப் பாடசாலைகளுள் முதன்மையான பாடசாலையாகச் சிறப்புப் பெற்றுள்ளது. வித்தியாலயத்தின் சிறப்பிற்கு வித்திட்டு, உயர்ச்சிக்கு வழிகாட்டிய அதிபர்களை, ஆசிரியர்களை நினைவுகூர்ந்து போற்றி நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வித்தியாலயம் 1945ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ம் திகதி ஓலைக்குடிசையில் உருவாகி 65 வருடங்களை நிறைவுசெய்து, பலரும் போற்றும் அளவிற்கு புகழ்பூத்த நிலைக்கு உயர்ந்திருக்கிறதென்றால் மிகையாகாது.

## வித்தியாலயத்தின் சாதனைகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்று அடிப்படையில் கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக குறிப்பிடத்தக்க சாதனைகள் படைத்துள்ளது. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனை படைத்துள்ளது.

1.) மாவட்டத்தில், வலயத்தில் அதிகளவு மாணவர்களை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதிபெற வைத்தமை.

2.) 1997ம் ஆண்டு தமிழ்மொழி மூலமான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் 1ம் இடம் பெற்றமை.

3.) மாகாண, மாவட்ட மட்டங்களில் 1ம் இடங்களை வென்றெடுத்தமை.

4.) தமிழ் மொழித் தினப்போட்டி, ஆங்கில மொழித் தினப்போட்டிகளிலும் அகில இலங்கை, மாகாண, மாவட்ட மட்டங்களில் 1ம் இடங்களையும், குறிப்பிடத்தக்க இடங்களையும் வென்றெடுத்தமை.

5.) மேலும் சிறுவர் நாடகம், சஞ்சிகை ஆக்கம், சமயப்போட்டி, சித்திரப்போட்டி, கட்டுரைப்போட்டிகளிலும் வெற்றி பெற்று தடம் பதித்துள்ளமை.

6.) 2010ம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 37 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளார்கள். 180 புள்ளிகளைப் பெற்று வலயத்தில் 1ம் இடத்தை வென்றுள்ளது. 70ற்கு மேல் 141 இற்குள் 88பேர் புள்ளிகள் பெற்று சிறப்பித்துள்ளார்கள்.

## மாணவர் அனுமதியும் கல்வி வளர்ச்சியும்

வருடந்தோறும் தரம் 1 அனுமதிக்கு 500க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் 140 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய இடவசதியுள்ளது. தங்களின் பிள்ளைகளை இந்தப் பாடசாலையிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பெற்றோர்கள் காட்டும்

# தரம் ~ 5
# பரிசளிப்பு விழா நிகழ்வுகள் ~ 2010

1.) அதிதிகளை வரவேற்றல்.

2.) மங்கள விளக்கேற்றல்.

3.) இறைவணக்கம்.

4.) வரவேற்பு நடனம் - (செல்வி.சு.நிலுக்ஷிகா 5K)

5.) வரவேற்புரை

6.) தலைமையுரை

7.) கவிதை - இ.வேதிகாதேவி 5B

8.) சிறப்பு அதிதி உரை

9.) ஆங்கிலக் குழுப்பாடல் தரம் 5 மாணவர்கள்

10.) கௌரவ அதிதி கள் உரை

11.) பிரதம அதிதி உரை

12.) ஆங்கிலப்பேச்சு - (அ.க.பாத்திமா அர்வா 5J)

13.) மாணவர் கௌரவிப்பு

14.) ஆசிரியர் கௌரவிப்பு

15.) நன்றியுரை

16.) பாடசாலைக் கீதம்

# அதிபர், ஆசிரியர்கள் விபரம் - 2010

01.) திரு.சி.வி.விஸ்வலிங்கம். (அதிபர்)
02.) திருமதி.ச.செல்வநாயகம் (பிரதி அதிபர்)
03.) திருமதி.ப.இராமநாதன்.
04.) திருமதி.தெ.டானியல்.
05.) திருமதி.அ.துரைசிங்கம்.
06.) திருமதி.ற.பரமேஸ்வரன்
07.) திரு.வே.செல்வராசா.
08.) திருமதி.வா.யோகேந்திரன்.
09.) திருமதி.கா.பரமானந்தராஜா
10.) திருமதி.த.கிருஷ்ணப்பிள்ளை
11.) திருமதி.மோ.சிவப்பிரகாசம்.
12.) திருமதி.சு.ஞானப்பிரகாசம்.
13.) திருமதி.சா.ஜீவானந்தம்.
14.) திருமதி.கெ.சிவராஜா.
15.) திருமதி.பி.பேரின்பநாயகம்.
16.) திருமதி.சு.ரவிதேவன்.
17.) திரு.செ.ஸ்ரீஸ்கந்தராஜா.
18.) திருமதி.இ.பத்மநாதன்.
19.) திருமதி.ற.பிரபாகரன்.
20.) திரு.செ.முகுந்தன்.
21.) திருமதி.சி.துரைரெட்ணம்.
22.) திருமதி.ஜெ.குகதாஸ்.
23.) திருமதி.ரா.அரசரெத்தினம்.
24.) திருமதி.த.தேவராஜன்.
25.) திருமதி.ரா.ஸ்ரீகாந்தன்
26.) திரு.றெ.ரா.பெஞ்சமின்
27.) திருமதி.அ.வ.கி.அருட்செல்வம்.
28.) திருமதி.அ.இருதயதாஸ்
29.) திருமதி.அ.புண்ணியமூர்த்தி
30.) திருமதி.மே.மேர்வின்

31.) செல்வி.ஷி.சண்முகநாதன்

32.) திருமதி.ஜெ.சிவகுமார்.

33.) திருமதி.ர.பாலச்சந்திரன்.

34.) திருமதி.அ.கமலநாதன்.

35.) திருமதி.க.அருள்நந்தி.

36.) செல்வி.அ.ஜ.ஜோதிமலர்.

37.) செல்வி.ச.செ.மாதவி.

## 2010/2011 பாடசாலை அபிவிருத்திச் சங்க முகாமைத்துவக்குழு

| | |
|---|---|
| தலைவர் | : திரு.சி.வி.விஸ்வலிங்கம் (அதிபர்) |
| பொதுச்செயலாளர் | : கலாநிதி.பெ.வினோபாபா (பெற்றோர்) |
| உபசெயலாளர் | : திருமதி.ரா.அரசரத்தினம் (ஆசிரியை) |
| பொருளாளர் | : திருமதி. அ.வ.கி.அருட்செல்வம் (ஆசிரியை) |
| முகாமைத்துவக்குழு | : திருமதி.சா.ஜீவானந்தம். (ஆசிரியை) |
| உறுப்பினர்கள் | : திருமதி.அ.இருதயதாஸ். (ஆசிரியை) |
| | திருமதி.இ.பத்மநாதன் (ஆசிரியை) |
| | திருமதி.ஜெ.சிவகுமார் (ஆசிரியை) |
| | திருமதி.கெ.சிவராசா. (ஆசிரியை) |
| | திரு.எஸ்.சுரேஸ் (பெற்றோர்) |
| | திரு.எஸ்.சிவகுமார் (பெற்றோர்) |
| | திரு.கே.கணேசமூர்த்தி. (பெற்றோர்) |
| | திரு.ஆர்.யோகலிங்கம். (பெற்றோர்) |
| | திரு.கே.குமணன் (பெற்றோர்) |
| | திரு.ஏ.ஜேம்ஸ். (பெற்றோர்) |
| | திரு. கே.எஸ்.நாகேஸ்வரன் (பெற்றோர்) |
| | திரு.ஏ.சசிகுமார். (பெற்றோர்) |
| | திருமதி.சாந்தினி. ஜெயராஜ் (பெற்றோர்) |
| | திருமதி.நிர்மலா. சுதாகரன் (பெற்றோர்) |
| கணக்காய்வாளர்கள் | : 1. திரு.கே.சுவர்ணச்சந்திரன் |
| | 2. திரு.எஸ்.முருகதாஸ். |

# Grade 5 Scolarship Examination Results 2010
# BT/ koddaimunai Kanishta Vidyalayam.

| *S.No.* | *Name* | *Marks* | *District rank* |
|---|---|---|---|
| 01. | Mas.Jude Surenraj Manohitharaj. | 180 | 03 |
| 02. | Miss.Navanayagam Jasmiga. | 173 | 21 |
| 03. | Miss.Suthaharan Annet Nilukshika. | 172 | 27 |
| 04. | Miss.Abdul Ghaffoor Fathima Arwa. | 171 | 35 |
| 05. | Mas.Raloshan Sriranjan. | 169 | 48 |
| 06. | Mas.Praneeth Suresh. | 169 | 48 |
| 07. | Mas.Thareejan Pakkiarajah. | 169 | 48 |
| 08. | Miss.Thayaparan Abishaya. | 168 | 58 |
| 09. | Mas.Nithurshan Kogilanathan. | 167 | 68 |
| 10. | Miss.Tharmananthan Shayanthavi. | 166 | 77 |
| 11. | Miss.Mahalingam Premika. | 165 | 98 |
| 12. | Mas.Joel Sathiyendra Thiyaheswaran. | 161 | 171 |
| 13. | Miss.Prakalathan Hamshana. | 161 | 171 |
| 14. | Mas.Sharan Uthayakumar. | 158 | 242 |
| 15. | Miss.Malarvannan Sathurshika. | 157 | 267 |
| 16. | Miss.Ramanathan Vethikadevi. | 157 | 267 |
| 17. | Mas.Janushan Easparan. | 156 | 299 |
| 18. | Miss.Sathasivam Bhajanah. | 156 | 299 |
| 19. | Mas.Kukatharshan Elango. | 154 | 358 |
| 20. | Mas.Sujikumar Sureshkumar. | 154 | 358 |
| 21. | Mas.Thanusiyan Sivapalasuntharam. | 154 | 358 |
| 22. | Miss.Keasavamoorthy Hariny. | 153 | 395 |
| 23. | Miss.Udayaraj Mathushariga. | 152 | 432 |
| 24. | Mas.Harijithan Vickneswaran. | 152 | 432 |
| 25. | Miss.Pushparajah Rojashayana. | 151 | 457 |
| 26. | Mas.Sujeevan Vimalendran. | 150 | 489 |
| 27. | Miss.Ranjith Marina Mithushalini. | 149 | 534 |
| 28. | Miss.Prabahar Susan Christina. | 148 | 570 |

| | | | |
|---|---|---|---|
| 29. | Mas.Nireshwar Jeyaganth. | 148 | 570 |
| 30. | Mas.Shanju Jeyamuralie. | 147 | 614 |
| 31. | Mas.Logithan Ranjan. | 147 | 614 |
| 32. | Mas.Pirosan Thambipillai. | 147 | 614 |
| 33. | Miss.Saseendra Sivakumar Arishna. | 145 | 707 |
| 34. | Mas.Merujan Sivanathan. | 145 | 707 |
| 35. | Miss.Suveendranathan Mithushika. | 144 | 748 |
| 36. | Mas.Thananjeyakailash Thirunaman. | 143 | 797 |
| 37. | Miss.Pakeerathan Thadchayi. | 143 | 797 |

## BT/ KODDAIMUNAI KANISHTA VIDYALAYAM, BATTICALOA GRADE 5 SCHOLARSHIP MARKS, 2010 (FROM 70 TO 141)

### *Boys*

| *S.No.* | *Name* | *Marks* |
|---|---|---|
| 1. | YOGARASA APILASAN | 140 |
| 2. | SIVANESAN NITHUSAN | 139 |
| 3. | PALARAJAN PIRASHATH | 138 |
| 4. | UTHAYAKUMAR THANUSAN | 137 |
| 5. | THEVARASA KEYASUTHAN | 137 |
| 6. | VIJENDRAN VIMAL | 136 |
| 7. | SELVARASA JATHURSHANATH | 131 |
| 8. | SURESHANANTH THANANCHJAYAN | 130 |
| 9. | MAHESWARAN KAPILAS | 130 |
| 10. | BALASUBRAMANIYAM ABINAYAN | 128 |
| 11. | THIYAGANATHAN DITHUJAAN | 126 |
| 12. | ARULANANDEM ARUDPRAGITH | 124 |
| 13. | CHANDRAKUMAR SATHURSHAN | 122 |
| 14. | PATHMAYOGAN SULAGSAN | 122 |
| 15. | RAGULAKUMAR THILAKSHAN | 121 |
| 16. | GENGATHARAN THANUSHAN | 121 |
| 17. | KIRUPAIRAJAH KIRUSHANTH | 118 |

| | | |
|---|---|---|
| 18. | PIETERSZ MARIO STEFENES | 118 |
| 19. | PUVANESARAJAH SIPOGITHAN | 117 |
| 20. | CHANDRAKUMAR LUXCHANAN | 115 |
| 21. | SUKIRTHARAJ PITHUSHAN | 115 |
| 22. | VASUDEVA BARNES ROBISTON REJOHN | 114 |
| 23. | YOGESWARAN PAVITHRAN | 108 |
| 24. | SATHYAKEERTHY JUGARSHAN | 108 |
| 25. | KUNASEKARAM THISHANANTH | 107 |
| 26. | VIJENDRAN DILUXSHANAN | 103 |
| 27. | MAHENDRAN THINUSHAN | 101 |
| 28. | SARAVANAPAVAN SAYANOLIPAVAN | 099 |
| 29. | SHANTHIRASEGARAN RAMPRASHAN | 097 |
| 30. | THAVARASAH DITHARSHAN | 092 |
| 31. | MUNIYANDI YASITHARAN | 092 |
| 32. | RAVICHANDRAN RAMRATHAN | 091 |
| 33. | KAMAENDRAN KANIYUDE KESHANTH | 091 |
| 34. | PERINPARAJAH SAJEEKAN | 089 |
| 35. | UTHAYAKUMAR ALEKSAN | 085 |
| 36. | ALEXANDER ANTREW | 083 |
| 37. | LOGANATHAN GITHUSHAN | 082 |
| 38. | ARUMUGANATHAN PRASHATH | 075 |
| 39. | THIYAGANATHAN SHARON LESLIE | 073 |
| 40. | SURESHKUMAR SATHEESKUMAR | 073 |
| 41. | IGNATIOUS SHARUSHAN | 071 |

## *Girls*

| *S.No.* | *Name* | *Marks* |
|---|---|---|
| 01. | THARMAPALAN HEMATHARSA | 141 |
| 02. | PASKARAN PIRANYA | 141 |
| 03. | VETTABROWN ANN MAGORIN | 137 |
| 04. | TENARENTSZ ANASTA NIYOMI | 137 |
| 05. | THANGAVEL APILASHINI | 136 |
| 06. | THANGATHURAI BAVATHARANI | 133 |

# 37 மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலான படங்கள்


M.J.Surenraj


N.Jasmiga


S.Annet Nilukshika


A.G.Fathima Arwa


S.Raloshan


S.Praneeth


P. Thareejan


T.Abishaya


K.Nithurshan


T.Shayanthavi


M.Premika


T.Joel Sathiyendra


P.Hamshana


U.Sharan


R.Vethikadevi


M.Sathurshika

# 37 மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலான படங்கள்


S.Bhajanah


E.Janushan


E.Kukatharshan


S.Sujikumar


S.Thanusiyan


K.Hariny


U.Mathushariga


V.Harijithan


P.Rojashayana


V.Sujeevan


R.M.Mithushalini


P.S.Christina


J.Nireshwar


J.Shanju


R.Logithan


T.Pirosan



S.S.Arishna



S.Merujan



S.Mithushika



T.Thananjeyakailash



P.Thadchayi

**2010 ஆண்டு நடைபெற்ற தரம் ~ 05**
**மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில்**
**சித்தியெய்திய மாணவ, மாணவிகளுடன் கல்வியூட்டிய**
**அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள்.**



## மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய
## அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள்



மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய
அதிபர், உபஅதிபர், ஆசிரியர்களுடன் சித்திபெய்திய மாணவர்கள்



மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்
கலாநிதி.பெ.வினோபாபா அவர்களின்

# நன்றியுரை

மட்டக்களப்பு நகரில் முக்கியத்துவம் பெற்றுள்ள ஆரம்பப் பாடசாலையாக மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் அமைந்துள்ளது. இப்பாடசாலையின் கடந்த கால, நிகழ்கால அதிபர்களும் ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்துள்ளனர்.

மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் முக்கியத்துவத் தையும், அதன் பிரபல்யத்தையும் பிரதிபலிப்பதாக ஐந்தாந்தர புலமைப்பரிசில் பரீட்சை அமைகின்றது. வருடாவருடம் மட்டக்களப்பு நகரில் உள்ள பாடசாலைகளில் மேற்படி பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதில் இப்பாடசாலை முன்னிலை வகிக்கின்றது என்பது நாம் அறிந்ததே. இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 37 பேர் தராதரம் கூடிய நிலையையும் 88 பேர் தகுதிநிலையடைந்தமையும் இப்பாடசாலை முன் மாதிரி கனிஷ்ட பாடசாலையாக தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு சான்றுபகிர்கின்றது.

பாடசாலையின் அதிபர், ஆசிரியர் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் பெற்றோரும் இணைந்து 2010ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவிக்கும் வகையில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு சிறப்பாக நடந்தேறுகின்றது.

இவ்விழாவை சிறப்பாக ஒழுங்கு செய்த ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் மேலும் இவ்விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்களுக்கும் அத்துடன் விருந்தினர்களாக கலந்து கொண்ட அனைவரிற்கும் ஏனைய வழிகளில் உதவி நல்கிய அனைவரிற்கும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கலாநிதி. பெ.வினோபாபா
பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுச் செயலாளர்
மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்




Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa. T.P : 0652227170